**பதுளை மாநகரசபை**
**பதுளை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 இலும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 05 இலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 செப்தெம்பர் 07 இல் மாநகர சபையின் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர்த்து, பதுளை மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

**கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொழுதுபோக்கு வரி கணக்கானது நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,614,454 ஆல் குறைத்து காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 28,960 பெறுமதியான மதிப்பிழந்த காசோலைகளானது நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், நடைமுறைச் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 905,000 பெறுமதியான பயன்படுத்தப்படாத இயந்திரம் மற்றும் உபகரணம் நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான நீதிமன்ற தண்டப்பண வருமானம் நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,643,440 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான முத்திரைக் கட்டணங்கள் ரூபா 481,476 ஆல் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டில் பெறப்பட்ட ஆனால் முன்னைய ஆண்டுடன் தொடர்புடைய ரூபா 27,614,175 தொகையான முத்திரைக் கட்டணங்கள் மீளாய்வாண்டிற்கான வருமானமாக காட்டப்பட்டிருந்தது.

(எ) இறுதி இருப்புக்களின் பெறுமதி ரூபா 178,812 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கணக்குகளின் மீதிகளுடன் அதற்கு நேரொத்த பட்டியல்களிலுள்ள மீதிகளை ஒப்பிடுகையில் ரூபா 132,370,338 தொகையான இணக்கஞ் செய்யப்படாத மீதி அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறவேண்டிய கணக்கின் பெறுமதி ரூபா 57,099,708 ஆகவிருந்த அதேநேரம் அத்திகதியிலுள்ளவாறான செலுத்த வேண்டிய கணக்கின் பெறுமதி ரூபா 148,339,577 ஆகவிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பேரேட்டின் மிகை மற்றும் பற்றாக்குறை கணக்கில் காட்டப்பட்ட ரூபா 68,987,350 பெறுமதியான நான்கு சொத்துக் கணக்குகள் மற்றும் ரூபா 3,365,019 மற்றும் ரூபா 12,313,461 பெறுமதியான முறையே வரவு மற்றும் செலவு மீதிகள் தேவையான தகவல்கள் சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தப்பட்டோ / சரிசெய்யப்பட்டோ இருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இடையிலான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| (அ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் | |
| (i) | 127(1) மற்றும் 42 ஆம் பிரிவுகள் | 1075 கட்டிட விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதும் 141 இணக்கச் சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) | பிரிவு 218 | நிதியாண்டின் போது மாநகர முதல்வரின் நிர்வாகம் தொடர்பாக அவரால் சபைக்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அதற்குப்பின் சரிபார்க்கப்பட்டு அதற்குப் பின் இது 06 மாதங்களிற்குள் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட வேண்டிய போதும் அத்தகைய அறிக்கை 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | பிரிவு 222 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மற்றும் அவ்வறிக்கையின் பிரதி நிதியாண்டு முடிவடைந்த பின்னர் சபைக்கும் உரிய அமைச்சரிற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் |

| | | |
|---|---|---|
| | | 2012, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிற்கான அத்தகைய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | 226(6) ஆம் பிரிவு | 1999 இலிருந்து வழங்கப்பட்ட ரூபா 3,835,000 தொகையாக மிகையறவீடுகள் இன்றைய திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (v) | 252 ஆம் அத்தியாயத்தின் 273 ஆம் பிரிவின் 28 ஆம் பந்தி | ஏழு மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரமானது சட்டத்தினை பின்பற்றாமல் வாடகைக்கு விடப்பட்டிருந்தது. |
| (vi) | 254(அ) ஆம் பிரிவு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 25,588,294 தொகையான நிலுவை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு | (i) சூழல் அனுமதிப்பத்திரங்களை பெற வேண்டிய நிறுவனங்களை இனங்காண்பதற்காக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) இறைச்சிக் கூடத்திற்கான சூழல் அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க இறைவரி அதிகாரச்சட்டத்தின் XVI ஆம் அத்தியாயத்தின் 133 ஆம் பிரிவு | சபையால் வங்கியில் பராமரிக்கின்ற நிலையான வைப்புக்கள் மீது கழிக்கப்பட்ட ரூபா 80,308 தொகையான பிடித்து வைத்தல் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 371 | ரூபா 622,103 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | கொடுப்பனவிற்கு வழங்கப்பட்டு 06 மாதங்களிற்கு மேலாக சமர்ப்பிக்கப்படாத ரூபா 178,273 பெறுமதியான 29 காலங்கடந்த காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (உ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயம் | |
| | (i) 4.5 மற்றும் 4.6 ஆம் பிரிவு | வேலையை இடைநிறுத்திய மற்றும் பதவியை வறிதாக்கிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 202,125 கடன்களானது பிணைதாரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2009 ஏப்ரல் 16 இன் 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | (i) சேவையிலுள்ள கிட்டத்தட்ட 40 உத்தியோகத்தர்களால் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.<br>(ii) ரூபா 42,672 தொகையான விடுமுறை கொடுப்பனவு மற்றும் மேலதிக நேரப்படிகளானது கைவிரல் அடையாள இயந்திரத்தால் நிரூபிக்கப்படாத 17 சந்தர்ப்பங்களிலும் மேலதிகமாகச் செலுத்தப்பட்டது. |
| (எ) | 41/1990 ஆம் இலக்க 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை | எரிபொருள் நுகர்வு பரீட்சிப்பு 31 வாகனங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 29,860,161 தொகையானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டு வரும் செலவை மிஞ்சிய வருமானம் ரூபா 7,883,986 ஆகவிருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

முன்னைய ஆண்டுகள் தொடர்பாக சபையின் நிதியத்திற்கு 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமதியாகவுள்ள நிலுவை வருமானம் ரூபா 32,089,208 தொகையானதுடன் மீளாய்வாண்டிற்கான பற்றுச்சீட்டிடப்பட்ட வருமானத்தில் ரூபா 21,569,697 தொகை 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகவிருந்தது.

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை மற்றும் ஏனைய அதிகார சபைகளுக்குரிய பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 7,237,019 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களும் ரூபா 10,381,452 தொகையான முத்திரைத் தீர்வைகளும் அறவிட வேண்டியிருந்தது.

### 2.2.3 பொழுதுபோக்கு வரி

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய பொழுதுபோக்கு வரி ரூபா 1,614,454 தொகையாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையீன்மைகள்

(அ) 2016 ஆம் ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான வச்சோ ஏற்றும் கருவி செயற்பாட்டிலிருந்த 297 இயந்திர மணித்தியாலங்கள் தொடர்பிலான ஓட்ட அட்டவணைகள் பராமரிக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 211,612 பெறுமதியான 2227.5 லீற்றர் எரிபொருள் இந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது வாக்கோ ஏற்றும் கருவியை செயற்படுத்துகையில் 1261 இயந்திர மணித்தியாலங்களிற்கு பதிலாக ரூபா 179,692 தொகையானது சாதாரண பயன்பாட்டுடன் ஒப்பிடும் போது அசாதாரண பயன்பாட்டால் ரூபா 142.50 மணித்தியாலமொன்றிற்காக மேலதிகமாக செலவழிக்கப்பட்டிருந்தது.

(இ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலகள் அமைச்சின் 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வாகனப் படியானது மாநகர சபையின் ஆணையாளரின் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 191,805 பெறுமதியான எரிபொருளிற்கு மேலாக சபைக்குச் சொந்தமான கப் ஒன்றின் பயன்பாட்டிற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சபையிடமிருந்து வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையீன்மைகள்

நேரடி ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டு சபையால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைகளிற்கான பொருட்களை கொள்வனவு செய்யும் போது மேலதிகமாக கட்டளையிடப்பட்டமையால் ரூபா 1,682,153 பெறுமதியான பொருட்கள் களஞ்சியங்களிலிருந்தது.

### 3.3 இனங்காணப்பட்ட நட்டம்

2002 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ரூபா 1,915,910 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

ரூபா 352,972 பெறுமதியான 20 லீற்றர் இயலளவுடனான 1297 பிளாஸ்டிக் நீர்த்தொட்டிகள் அண்ணளவாக 3 ஆண்டுகளிற்கு மேலாக பயன்படுத்தப்படாமல் சபையின் இடத்திலிருந்தது.

### 3.5 திண்மக்கழிவு முகாமைத்துவம்

(அ) திணைமக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நகரத்தின் மத்தியிலுள்ள முன்மொழியப்பட்ட விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள விளையாட்டு மைதானம் மற்றும் நீர்த்தடாகம் போன்ற திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு பயன்படுத்துவதால் பொதுமக்களால் பயன்படுத்த முடிந்திருக்கவில்லை. கெட்ட மணமானது நகரப் பிரதேசம் முழுதும் பரவுகின்றது என மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) குப்பையை சேமிப்பதற்காக பயன்படுத்தும் பிரதேசத்திற்கு கிடைக்கப் பெறுகின்ற மழைநீர் மற்றும் குப்பை பதுள ஓயாவிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

(iii) சூழலுக்குரிய தீவிர சேதம் பொலித்தீனிற்கு ஏற்பட்ட நெருப்பு மற்றும் சேர்க்கும் இடத்திலான பொலித்தீன் மற்றும் திண்மக்கழிவு போன்றவற்றால் 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்டது.

(iv) திண்மக்கழிவு சேகரித்தல் தொடர்பாக சட்டத்தில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கிணங்க சபையால் திண்மக்கழிவுகள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முறையான கழிவகற்றல் முறைமையானது சபையின் அங்கீகரிக்கப்பட்ட பிரதேசத்தினுள் தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கொல்களமானது சுத்தமற்ற நிலையிலிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஈ) கொல்களமானது வெளிவருகின்ற கழிவுகள் பதுறு ஓயா நீருடன் கலக்கின்றது.

### 3.6 பதவியணியினர் கடன்கள்

ரூபா 304,780 பெறுமதியான கடன் கோவைகள் தவறாக வேறொரிடத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அக்கடன் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 கணக்களிப்புப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடானது மீளாய்வாண்டிற்கான வருமான மற்றும் செலவீன முகாமைத்துவ கட்டுப்பாட்டின் வினைத்திறனான கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த பெறுகைத் திட்டம்

வருடாந்த பெறுகைத் திட்டமானது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

2016 ஆம் ஆண்டிற்கான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

---

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) நிலையான சொத்துக்கள்

(ஆ) கணக்கீடு

(இ) களஞ்சிய முகாமைத்துவம்

(ஈ) வாகனங்கள் மீதான கட்டுப்பாடு

(உ) கடன்பட்டோர்கள் மற்றும் கடன்கொடுத்தோர்கள்